2026 ஜூலை மாதம் 29– ஆம் தேதி புதன்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

S.C. நெம்பர் : 11/2026

2026–ஆம் ஆண்டு ஜூலை மாதம் 29– ஆம் தேதி புதன்கிழமை

திருமதி.டி.சுபத்ரா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் : | PW5 (LW9) – Dr.ரேவந்த் ராஜாங்கம் |
| தகப்பனார் பெயர்: | ராஜாங்கம் |
| ஊர்: | ஈரோடு |
| வட்டம்: | ஈரோடு |
| மாவட்டம்: | ஈரோடு |
| தொழில்: | மருத்துவர், மதுரை மீனாட்சிமிஷன் மருத்துவமனை |
| வயது : | 30 |

29.07.2026

(எதிரிகள் ஆஜர். எதிரிகளின் வழக்கறிஞரும் ஆஜர்).
(சாட்சி காணொளி மூலம் ஈரோடு, முதன்மை மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் இருந்து சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, சாட்சியம் அளிக்கப்படுகிறது)

**முதல் விசாரணை:–**

1. நான் தற்சமயம் தேனி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் கடந்த 10.04.2024 ம் தேதி அதிகாலை 12.34 மணிக்கு பணியிலிருந்தபோது, தேனி, கம்போஸ்ட் ஓடைத்தெருவை சேர்ந்த கருப்பையா மகன் ஸ்ரீதர் என்பவர் வடபுதுப்பட்டியில் வைத்து இரவு 10.00 மணிக்கு 17 ஆண்களும், 3 பெண்களும் சேர்ந்து அடித்துவிட்டதாக வந்தவரை விபத்து பதிவேடு எண்.0084879 பிரகாரம் பதிவு செய்து, உள்நோயாளியாக சிகிச்சைக்கு அனுமதித்தேன். ஸ்ரீதர் என்பவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று காயச்சான்று வழங்கினேன். அந்த விபத்து பதிவேடு **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. காயத்தின் தன்மைக்குறித்து நான் வழங்கிய கருத்து **அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. மேலும் அதே நேரத்தில் சிலர் அடித்துவிட்டதாக தேனி, கம்பம் போலீஸ் குவார்ட்டர்ஸில் வசிக்கும் முத்துக்குமரன் என்பவரை பரிசோதித்து விபத்து பதிவேடு

எண்.0084880 பிரகாரம் பதிவு செய்து, உள்நோயாளியாக சிகிச்சைக்கு அனுமதித்தேன். மேற்படி முத்துக்குமரன் என்பவர் மருத்துவ சிகிச்சையிலிருந்து தானாக வெளியேறி சென்றுவிட்டதால் அவருக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மை குறித்து கூறமுடியவில்லை. அந்த விபத்து பதிவேடு **அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**1 முதல் 7 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –**</u>

3. காயம்பட்ட இருவரும் மருத்துவமனையில் அனுமதிக்கப்படும்போது, காவல்நிலையத்திலிருந்து குறிப்பாணை (Memo) கொண்டுவந்தார்களா என்றால் எனக்கு ஞாபகமில்லை. காயம்பட்ட இருவரும் தங்களை அடையாளம் தெரியாத நபர்கள் தாக்கியதாக குறிப்பிட்டார்கள் என்றால் சரிதான். காயம்பட்ட இருவரும் தங்களை எந்த இடத்தில் வைத்து தாக்கினார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். காயம்பட்ட இருவரும் தங்களை எந்த ஆயுதத்தால் தாக்கினார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். காயம்பட்ட இருவரும் தாங்கள் என்ன வேலை செய்து வருகிறார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

4. காயம்பட்ட இருவரும் தனிநபர் உதவி இல்லாமல் சிகிச்சையில் சேர்ந்துள்ளார்கள் என்றால் சரிதான். முத்துக்குமரனுக்கு வழங்கிய அ.சா.ஆ.4 விபத்து பதிவேட்டில் தேதி அடித்தல் திருத்தல் உள்ளது என்றால் சரிதான், அதிகாலை என்பதால் தேதியில் மாற்றம் செய்தேன். காயம்பட்ட இருவருக்கும் வெளிப்புற காயங்கள் எதுவும் இல்லை என்றால் சரிதான். முத்துக்குமரன் அன்றைய தினமே சிகிச்சையிலிருந்து தன்னிச்சையாக வெளியேறி சென்றுவிட்டார் என்றால் சரிதான்.

<u>**மறு விசாரணை**</u> :– இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 29.07.2026 அன்று புதன்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI
Digitally signed by G SREE DEVI
Date: 2026.07.29 17:00:32 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
29.07.2026